# அத்தியாயம் – 8

## திடக்கழிவு மேலாண்மை

அ. தற்போதைய நிலை

8.1 திடக்கழிவு என்பது வசிப்பிடம் மற்றும் வியாபார நிமித்தமான கழிவுப் பொருள்கள், தொழிற்சாலை கழிவுப் பொருள்கள், மருத்துவமனை கழிவுப் பொருள்கள், மின்னணு சாதன கழிவுப் பொருள்கள் மற்றும் கட்டிடங்கள் கட்டுவதன் மூலம் ஏற்படும் கழிவுப் பொருள்கள் போன்றவற்றை உள்ளடக்கியதாகும்.

8.2 சென்னை மாநகராட்சிப் பகுதியில், ஒரு நாளைக்கு அதிகபட்சமாக 3000 டன் திடக்கழிவு வெளியேற்றப்படுகின்றது என்று மதிப்பிடப்பட்டுள்ளது. திடக்கழிவு மாற்று நிலையங்களும் கொடுங்கையூர் மற்றும் பெருங்குடியில் திடக்கழிவு கொட்டுமிடங்களும் அமைந்துள்ளன. தற்போதுள்ள சேகரிப்பு, அகற்றுதல் மற்றும் குப்பையை கொட்டும் முறைகளில், குடியிருப்புகளிலிருந்து வரும் கழிவுப் பொருள்கள், வியாபார நிமித்தமான கழிவுப் பொருள்கள், மற்றும் ஒரு குறிப்பிட்ட அளவு கட்டுமான கழிவுப் பொருள்கள் ஆகியவற்றைத் தவிர்த்து குப்பைகளை வேறுபடுத்தும் முறை காணப்படவில்லை. மருத்துவக் கழிவுப் பொருள்கள் மற்றும் தொழிற்சாலை கழிவுப் பொருள்கள் அழித்தல், இதை ஏற்படுத்துவோரின் பொறுப்பில் அடக்கம். ஆனால் இவைகளில் பெரும்பாலானவை மாநகராட்சி குப்பை அகற்ற ஏற்படுத்தியுள்ள வசதிகளில் கொட்டப்படுகிறது. மின்னணு சாதன கழிவுப் பொருள்கள் அழித்தல் திட்டம் தனியாக அமையவில்லை.

8.3 பல்வகையான கழிவுப் பொருள் அன்றாடம் வெளியேற்றப் படும் விவரம் கீழ்கண்ட அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை எண்.8.1. சென்னைப் பெருநகர்ப் பகுதியில் தினமும் வெளியேற்றப்படும் திடக்கழிவு (டன்னில்)**

| பகுதி | குடியிருப்பு மற்றும் வியாபாரப்பகுதி | மருத்துவமனை | மொத்தம் | மின்னணு சாதன கழிவு | கட்டிடக்கழிவு |
|---|---|---|---|---|---|
| சென்னை மாநகராட்சி | 2620 | 80 | 2700 | 5 | 500 |
| நகராட்சிகள் | 1073 | 11 | 1084 | 2 | 50 |
| பேரூராட்சிகள் | 207 | 1 | 208 | 1 | கி.பெ |
| ஊராட்சி ஒன்றியங்கள் | 255 | 1 | 256 | 2 | -- |
| மொத்தம் | 4155 | 93 | 4248 | 10 | 550 |

கி.பெ – விவரம் கிடைக்கப் பெறவில்லை.

8.4 மாநகராட்சியில் தற்போதுள்ள திடக்கழிவு மேலாண்மை முறையை மேம்பட செய்வது அவசியம். மாநகராட்சிப்பகுதியை தவிர்த்து இதர சென்னைப் பெருநகர்ப் பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை முறையாக செயல்படுத்தப்பட வேண்டும். மாநகராட்சியின் சில கோட்டங்களில், திடக்கழிவு சேகரிப்பு தனியார்வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இது சேகரிப்பை அதிகப்படுத்தியுள்ளது. ஆனால், மொத்த திடக்கழிவு மேலாண்மையில் குறைந்த அளவு முன்னேற்றமே ஏற்பட்டுள்ளது. 1996 ஆம் ஆண்டில், சென்னைப் பெருநகர்ப் பகுதியில் திடக்கழிவு மேலாண்மை பற்றி, சுற்றுப்புற வளங்கள் மேலாண்மை ஆலோசனைக் குழு, ஒரு ஆய்வு நடத்தியது. ஆனால் இவ்வறிக்கை பரிந்துரைகள் இன்னமும் செயல்படுத்தப்படவில்லை.

8.5 மாநகராட்சி, இரண்டு இடங்களில் திடக்கழிவு கொட்டுமிடங்களை பராமரித்து வருகிறது. அதில் ஒன்று வடபுறத்தில் அமைந்த கொடுங்கையூர், மற்றொன்று தென்புறத்தில் அமைந்த பெருங்குடி இவை இரண்டிலும் கொட்டுமளவு அதிகரித்துள்ளதால், அருகில் குடியிருக்கும் மக்களுக்கு

சுகாதாரக்கேடு ஏற்படும் நிலை ஏற்பட்டுள்ளது. இவை மட்டுமல்லாமல், அந்த இடம் மற்றும் அதைச் சுற்றியுள்ள இடங்கள் அனைத்தும், சுற்றுப்புற துப்புரவின்மையால் மிகவும் மோசமான நிலையடைந்துள்ளது. சுமார், 5 முதல் 6 ஹெக்டேர் நிலப்பரப்பு உடைய, சிறிய திடக்கழிவு கொட்டுமிடங்களை, ஆலந்தூர், அம்பத்தூர், ஆவடி மற்றும் திருவொற்றியூர் நகராட்சிகள் பயன்படுத்திவருகின்றன. சென்னைப் பெருநகர்ப் பகுதியில் 16 நகராட்சிகள் உள்ளன. இதில் 8 நகராட்சிகளில், சரியான திடக்கழிவு கொட்டுமிடங்கள் இல்லை.

**முதன்மை பங்கீடுபாடு கொண்டோர்:**

8.6 திடக்கழிவு மேலாண்மை திட்டத்தை செயல்படுத்துவது, மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் கிராம ஊராட்சிகளின் தலையாய கடமையாகும்.

8.7 சென்னைப் பெருநகர்ப் பகுதியில், கீழ்கண்ட விதிகளை செயல்படுத்துவது, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் பொறுப்பாகும்.

(i) நகராட்சி திடக்கழிவு விதிகள் 2000 (மேலாண்மை மற்றும் கையாளுதல்)

(ii) மருத்துவக் கழிவு விதிகள் (மேலாண்மை மற்றும் கையாளுதல்)

8.8 எக்ஸ்னோரா என்ற தனியார் நிறுவனம், பல குடியிருப்போர் நலச் சங்கங்கள் மூலமாக வீடு வீடாகச் சென்று திடக் கழிவு சேகரிப்பதில் மிகவும் திறமையாக செயல்பட்டு வருகிறது. இவைகள் பல வருடங்களான ஒரு திடக்கழிவு மேலாண்மையில் ஒரு முக்கிய அம்சமாக உள்ளன. இதன் மூலம், சென்னை மாநகரில் திடக்கழிவு மேலாண்மைப் பற்றி ஒரு நல்ல விழிப்புணர்வும் மற்றும் செயல்பாடுகளும் ஏற்பட்டுள்ளன.

**திடக்கழிவின் மதிப்பீடு**

8.9 சென்னை மாநகர் உட்பட, சென்னைப் பெருநகர்ப் பகுதியில், திடக்கழிவு வெளியேற்றம் 2026 ஆம் ஆண்டில் சுமார் 6590 டன்கள் இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த மதிப்பீடு, தனி நபர் திடக்கழிவு வெறியேற்றத்தின் அடிப்படையி.ல் கணக்கிடப்பட்டுள்ளது.

| உள்ளாட்சி நிறுவனங்கள் | டன்கள் |
|---|---|
| சென்னை மாநகராட்சி | 3400 |
| நகராட்சிகள் | 2050 |
| பேரூராட்சிகள் | 550 |
| ஊராட்சி ஒன்றியங்கள் | 540 |
| அனைத்து உள்ளாட்சி நிறுவனங்கள் | 6590 |

8.10 1996 ஆம் ஆண்டின் இ.ஆர்.எம். அறிக்கையானது, மாநகர்ப்பகுதியில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டம், 90 சதவீதத்திலிருந்து (1996–2000) 100 சதவீதமாக (2001–2005) உயர்த்தப்பட வேண்டும் என பரிந்துரைத்துள்ளது. நகராட்சிகளைப் பொறுத்த மட்டில் அவை 50 சதவீதத்திலிருந்து (1996–2000) 70 சதவீதமாகவும் (2005–2011) உயர்த்தப்பட வேண்டும் என்று பரிந்துரைத்துள்ளது. பேரூராட்சிகளைப் பொறுத்த மட்டில், 10, 30 மற்றும் 70 சதவீதமாக உயர்த்தப்பட வேண்டும் என்று பரிந்துரைத்துள்ளது. இவை, சார்பாக, மேலும் தகவல் அறிய பாகம் III ஐப் பார்க்கலாம்.

8.11 இதர கழிவிற்கான திட்ட மதிப்பீடு பற்றி தனியான விவரங்கள் இல்லை. கீழ்கண்ட திடக்கழிவுகள், உருவாகும் அளவுகளை மதிப்பீடு செய்து இவற்றிற்காக திடக்கழிவு மேலாண்மையைத் திட்டமிட ஓர் ஆய்வு மேற்கொள்வது அவசியமாகிறது.

(i) வீட்டுக் கழிவு மற்றும் வியாபாரக்கழிவு – மக்கக் கூடிய, மக்காத

(ii) தொழிற்சாலைக் கழிவு – அபாயகரமான மற்றும் அபாயகரமற்ற

(iii) மருத்துவக்கழிவு – அபாயகரமான மற்றும் அபாயகரமற்ற

(iv) மின்னணு சாதன கழிவு - மறு சுழற்சி செய்யத்தக்க மற்றும் செய்யதக்கதல்லாத

(v) கட்டுமானக் கழிவு – மீண்டும் கட்டுமானத்திற்கு பயன்படக்கூடிய பொருள்.

**ஆ) கொள்கைகளும் வரைமுறைதிறனும்**

8.12 அ) திடக்கழிவு மேலாண்மை சம்பந்தமாக மத்திய அரசால் உருவாக்கப்பட்ட சட்டம் மற்றும் 2000 ஆம் ஆண்டின் நகராட்சி திடக்கழிவு விதிகளை (கையாளுதல் மற்றும் மேலாண்மை) சென்னைப் பெருநகர்ப் பகுதி உட்பட்ட அனைத்து உள்ளாட்சி நிறுவனங்களும் கண்டிப்பாக கடைப்பிடிக்க வேண்டும்.

ஆ) திடக்கழிவு கொட்டும் இடங்களின் சுற்றுப்புற சுகாதாரத் தன்மையை மதிப்பீடு செய்து, அவைகளின் மேம்பாட்டிற்கு தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

இ) நகரங்களில், சுகாதாரமாகவும் மற்றும் பாதுகாப்பாகவும் வாழ்வதற்கு, திடக்கழிவு மேலாண்மையில் ஒவ்வொரு குடிமகனின் மற்றும் தனியார் நிறுவனத்தின் ஈடுபாடு அவசியம். திடக்கழிவு உருவாகும் இடத்திலேயே, அவைகளைப் பிரித்து தனித்தனியாக அழிக்க போதுமான விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். திடக்கழிவுகளை, மக்கும் குப்பைகள் மற்றும் மக்காத குப்பைகள் என்று பிரித்து அழிப்பதில், உள்ளாட்சி நிறுவனங்களின் பளுவைக் குறைக்க குடியிருப்போர் நலச் சங்கங்களும் மற்றும் அரசு சாரா நிறுவனங்களும் முயற்சி எடுத்துள்ளன. ஆனால், உள்ளாட்சி நிறுவனங்களிடமிருந்து ஊக்கக் குறைவு உள்ளிட்ட பல காரணங்களால் இவை நீடித்த நிலையான தாக்கத்தை ஏற்படுத்தவில்லை.

ஈ) ”மாசு படுத்துபவர்கள் வரி செலுத்த வேண்டும் ’’ என்ற கோட்பாட்டின் அடிப்படையில், உள்ளாட்சி நிறுவனங்கள், ஒரு குறிப்பிட்ட தொகையை வரியாக நிர்ணயம் செய்து, அதிகப்படியாக திடக்கழிவு வெளியேற்றுபவர்களிடமிருந்து, அதாவது உணவகம், திருமண மண்டபம், சந்தைகள் மற்றும் வணிக வளாகம் ஆகியவற்றிலிருந்து வசூல் செய்யலாம்.

உ) மனித ஆளுமையை குறைப்பதற்கு, கழிவுப் பொருள்களை அப்புறப்படுத்த, ஆட்டோ – டிப்பர் வாகனம், மூன்று சக்கர வாகனம் மற்றும் தள்ளுவண்டி போன்ற இயந்திரங்களை பயன்படுத்த ஊக்கப்படுத்தலாம்.

ஊ) திடக்கழிவு மேலாண்மை, இன்னும் சிக்கல் நிறைந்ததாக ஆகிக் கொண்டு வருவதால், திட்டம் வகுத்தல், நிதி ஒதுக்கீடு, மேலாண்மை, நேரடி கண்காணிப்பு உள்ளிட்ட தொழில்நுட்பம் மற்றும் நிர்வாகத் திறனை, உள்ளாட்சி நிறுவன அலுவலர்களிடம் பலப்படுத்த வேண்டும்.

எ) சுற்றுச்சூழ் ஆதார மேலாண்மை ஆய்வில் பரிந்துரைத்தபடி, குடிமக்கள் மற்றும் தனியார் நிறுவனம் உள்ளிட்ட முதன்மை பங்கீடுபாடு கொண்டோருடன் திடக்கழிவு மேலாண்மைக்கு ஒரு தனி செயல் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும்.

**இ. திட்டம்**

ஒட்டு மொத்த திடக்கழிவு மேலாண்மை செயல் திட்டம் உருவாக்கப்படும்போது, கீழ்கண்டவைகள் கருத்தில் கொள்ளப்பட வேண்டும்.

(i) கழிவுகள் கிடைக்கும் இடத்திலேயே, அவைகள் பிரிப்பதற்கு முறைகள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும்.

(ii) கழிவால் நிலத்தை நிரப்பும் இடத்தில் கழிவுகளை குறைக்கும் பொருட்டு, அவைகளை அருகாமை இடங்கள் மற்றும் அவை ஏற்படும் இடங்களிலேயே மக்கச் செய்வதும் மற்றும் மீண்டும் பயன்படுத்துவதும் செயல்படுத்தப்பட வேண்டும்.

(iii) குப்பையை நிரப்பும் இடங்களை பல உள்ளாட்சி நிறுவனங்கள் பங்கிட்டுக் கொள்ளலாம்.

(iv) மின்கழிவுகள் மற்றும் கட்டுமான கழிவுகள் மறு சுழற்சி முறையில் பயன்படுத்துவதற்கான வசதிகள் செய்து தரப்பட வேண்டும்.

(v) குழந்தைகள், இளைஞர்கள் மற்றும் பொது மக்களிடம், விஞ்ஞான திடக்கழிவு மேலாண்மை பற்றி அறிவுப்பூர்வமான விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

(vi) திடக்கழிவுகளை, குறைப்பது, பிரிப்பது, கொண்டு செல்வது, மீண்டும் பயன்படுத்துவது மற்றும் இறுதியான எல்லாவித திடக்கழிவுகளை கொட்டுவது போன்றவைகளில் அரசுசாரா நிறுவனங்கள் ஈடுபடுவதை ஊக்குவிக்க வேண்டும்.

(vii) இத்திட்டம் நிறைவேற்றப்பட, பொறுப்புகள் வரையறுக்கப்பட வேண்டும்.

**8.14** இத்திட்டத்தில் தற்போது குப்பை நிரப்பும் இடங்கள் மற்றும் நகராட்சிகள் உத்தேசித்துள்ள புது குப்பை நிரப்பும் இடங்கள் ஆகியவற்றைப் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.

**8.15** மருத்துவக் கழிவு, அபாயகரமான கழிவு மற்றும் அபாயகரமற்ற கழிவு ஆகியவற்றை அகற்றுவதற்கு ஏற்படுத்தப்பட்டுள்ள திடக்கழிவு மேலாண்மை விதிகளை தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் கட்டாயமாக அமலாக்க இத்திட்டம் பரிந்துரைக்கிறது.

**8.16** புதிதாக அபிவிருத்தி செய்யப்படும் இடங்கள், குடியிருப்பு இடங்கள், அடுக்குமாடி குடியிருப்புகள், வியாபாரத்தலங்கள் மற்றும் தொழிற்சாலைகளில், திடக்கழிவு மேலாண்மைக்காக பரிந்துரைக்கப்பட்ட அலகுகள் பின்பற்றப் பட வேண்டும். இது குறித்த விவரங்கள் பாகம்-2 வளர்ச்சி விதிமுறைகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

**8.17** கோயம்பேடு சந்தையில் உருவாகும் கழிவுப் பொருள்களை பயன்படுத்தி மின்சாரம் தயாரிப்பது போல், கழிவிலிருந்து சக்தி உருவாக்கும் தொழில் கூடங்களை பரவலாக்க இத்திட்டம் பரிந்துரைக்கிறது.

**ஈ மேலாண்மை மற்றும் மறு ஆய்வு**

**8.18** அரசு மற்றும் அரசு சார்பற்ற பங்கீடுபாடு கொண்டோர் மற்றும் வல்லுநர்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளை கொண்ட, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின், “உறைவிடம் மற்றும் உள்கட்டமைப்புக் குழு” என்றழைக்கப்படும் ஒரு குழு அமைக்கப்பட்டு, அக்குழு, இந்தத் துறைகளில் செயல்படுத்தப்படும் திட்டங்களையும் மற்றும் செயற் திட்டங்களையும் கண்காணித்து இந்நோக்கத்திற்காக தேவைப்படும் ஆய்வுகளை தொடங்கி வைத்து மற்றும் தகவல்களை திரட்டும் பணியையும் மேற்கொள்ளும். இக்குழு மூன்று மாதத்திற்கொரு முறை அல்லது எப்போதெல்லாம் தேவைப்படுகிறதோ அவ்வப்போது கூடி நடவடிக்கைகளை மேற்கொள்ளும். சம்பந்தப்பட்ட பங்களிப்பாளர்களுடன் கலந்தாலோசித்து, இப்பணிக்கான, விரிவான திட்டவட்ட குறிப்பு கோரிக்கையினை தயாரிக்கும்.

**8.19** இத்துறையில் கீழ்வரும் பல்வேறு உப-பிரிவுகளுக்காக உருவாக்கப்பட்ட சிறப்பு பணிக் குழுக்களின் உதவியுடன் மேற்கூறப்பட்ட குழு இப்பகுதியைச் செய்யும்.